**கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,**

**கொழும்பு – 4.**

**முதலாம் தவணைப் பரீட்சை – 2015**

**வரலாறு**

தரம் : 6 நேரம் : மணித்தியாலம்

## பகுதி I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. உமது பிரதேசத்தின் வரலாற்றை அறிய உதவுபவர்
   (1) பெற்றோர் (2) மதகுரு (3) கிராமசேவையாளர்
   (4) மூத்தோர்

2. உமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   (1) 1982 (2) 1980 (3) 1981 (4) 1991

3. பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் எழுத்துருவ ஆவணம்
   (1) அதிபரின் கூற்று (2) பழையமாணவர் குறிப்புக்கள்
   (3) சம்பவத்திரட்டுப் புத்தகம் (4) பாடசாலைக் கட்டடங்கள்

4. இலக்கிய மூலாதாரங்களில் ஒன்று
   (1) பொலநறுவை கல்விகாரை (2) மகாவம்சம்
   (3) புராதனகால நாணயங்கள் (4) கல்வெட்டுக்கள்

5. மகிந்ததேரர் இலங்கைக்கு வந்தது
   (1) கி.மு. 250 (2) கி.பி. 250 (3) கி.மு. 247 (4) கி.பி. 247

6. புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்தது
   (1) கி.பி. 544 (2) கி.மு. 543 (3) கி.பி. 543 (4) கி.மு. 544

7. முற்காலத்தில் “கீழைத்தேசங்களின் தானியக்களஞ்சியம் என அழைக்கப்பட்ட நாடு?
   (1) இந்தியா (2) சீனா (3) இலங்கை (4) தாய்லாந்து

8. பொலநறுவை கல்விகாரையை நிர்மானித்தவர்

(1) மகாநாம தேரர் (2) 1ம் விஜயன்

(3) முதலாம் பராக்கிரமபாகு (4) மகாசேனன்

9. நீர் பாடசாலைக்குச் சேர்ந்த ஆண்டான 2010ம் ஆண்டை புத்த வருடத்தில் கூறின்

(1) 2554 (2) 2553 (3) 1467 (4) 1466

10. மரஅட்டை போன்ற பல பாதங்களைக் கொண்ட உயிரினம் தோற்றம் பெற்ற ஆண்டு

(1) சிலுரியன் (2) பெலியொசொயி

(3) பனிக்காலம் (4) வெப்பகாலம்

11. ஒபபீனியாவின் பாறைப்படிவு கண்டுபிடிக்கப்பட்ட நாடு

(1) இஸ்ரேல் (2) அவுஸ்ரேலியா (3) கனடா (4) ஆபிரிக்கா

12. வானரக் குடும்பத்திலிருந்து மனிதபரம்பரை தோன்றுவதற்கு முக்கிய காரணம்

(1) உணவுப் பற்றாக்குறையின் காரணமாக

(2) வெப்பகாலத்தில் நிலவிய காலநிலை

(3) இரு கால்களால் நடக்கத் தொடங்கியதால்

(4) பெரும்பனிக்காலத்தில் நிலவிய காலநிலை

13. நெருப்பைக் கண்டுபிடித்து முதன்முதலில் பயன்படுத்திய மனிதன்

(1) ஹோமோ இரெக்டஸ்

(2) ஹோமோ ஒஸ்ரோபித்திகள்

(3) ஹோமோ ஹபிலிஸ்

(4) ஹோமோ நியன்டதானென்சிஸ்

14. ஹோமோ ஹபிலிஸ் என்பதன் கருத்து

(1) இருகால்களாலும் நடந்து செல்பவன்

(2) ஆற்றலுள்ள மனிதன்

(3) நெருப்பை பயன்படுத்தியவன்

(4) முன்னோற்றமான மனிதன்

15. ஹோமோ நியன்டதாலன்சிஸ் வாழ்ந்த காலம்

(1) 3 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்

(2) 2 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்

(3) 6 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்

(4) 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்

16. மனிதன் குழுவாக இடத்திற்கிடம் கூட்டமாக குடிசைகளை அமைத்து வாழப்பழகிக்கொண்டது

(1) பழைய கற்காலம் (2) இடைக் கற்காலம்

(3) புதிய கற்காலம் (4) விவசாயயுகம்

17. பண்டமாற்று முறை ஆரம்பமானது

(1) விவசாயயுகம் (2) புதிய கற்காலத்தில்

(3) இடைக் கற்காலத்தில் (4) பழைய கற்காலத்தில்

18. பழைய கற்கால மனிதன் உணவைப் பெற்ற முறை எது?

(1) வேட்டையாடல் மூலம் (2) பண்டமாற்று மூலம்

(3) விவசாயம் மூலம் (4) வர்த்தகம் மூலம்

19. நெல் முதன்முதலில் பயிரிடப்பட்ட இடம்

(1) மெக்சிக்கோ (2) சீனா (3) இஸ்ரேல்

(4) மத்தியதரைக் கடல்

20. தரப்பட்ட படத்திலுள்ள இனம்

(1) கோக்கசொயிட் (2) நிக்ரோயிட்

(3) ஒஸ்ரலொயிட் (4) மொஸ்கோலொயிட்

## பகுதி II

**முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.**

(1) நீர் வகுப்பறையில் செய்த கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாகளுக்கு விடை தருக.

1. நீர் வகுப்பறையில் செய்த கணிப்பீடு யாது? (1 புள்ளி)
2. அக் கணிப்பீட்டிற்கு நீர் வழங்கிய தலைப்பு யாது? (2 புள்ளிகள்)
3. அக் கணிப்பீட்டிடை மேற்கொள்வதற்கு உமக்கு உதவியளித்த மூலாதாரங்கள் யாவை? (2 புள்ளிகள்)
4. இதற்காக உமக்கு உதவி செய்தவர்கள் யாவர்? (2 புள்ளிகள்)
5. வகுப்பறையில் அக் கணிப்பீட்டிடை மேற்கொண்டதால் நீர் அடைந்த பயன்கள் யாவை? (3 புள்ளிகள்)
6. அக் கணிப்பீட்டிடை மேற்கொள்ளும் போது நீர் எதிர்கொண்ட பிரச்சினைகள் யாவை? (3 புள்ளிகள்)
7. அக் கணிப்பீட்டினூடாக நீர் அடைந்த நன்மைகள் யாவை? (3 புள்ளிகள்)

(2)
1. வரலாறு என்றால் என்ன? (3 புள்ளிகள்)
2. வரலாற்றைக் கற்பதன் பயன்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் நான்கு தருக. (5 புள்ளிகள்)

(3)
1. மூலாதாரங்கள் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
2. வரலாற்று மூலாதாரங்களை எவ்வாறு வகைப்படுத்துவீர்? அவற்றுக்கு இவ்விரண்டு உதாரணம் தருக. (4 புள்ளிகள்)
3. உமது நாட்டைப்பற்றி அறிய உதவும் எழுத்துரு ஆவணம் 2 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(4) 1. வரலாற்று காலத்தை அளவிடப் பயன்படும் எளிமையான முறை யாது?

(3 புள்ளிகள்)

2. வரலாற்று காலத்தை அறிய உதவும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

3. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| சந்தர்ப்பம் | கிறிஸ்து ஆண்டு | புத்த வருடம் |
|---|---|---|
| 1. மகாசேன மன்னனின் ஆட்சி ஆரம்பம் | கி.பி. 247 | ………………. |
| 2. இயேசுகிறிஸ்து நாதரின் பிறப்பு | ………………. | 544 |
| 3. உமது பிறந்த ஆண்டு | ………………. | ………………. |

(4 புள்ளிகள்)

(5) 1. புவியில் முதலில் தோன்றிய உயிரினம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

2. மனிதன் ஏனைய விலங்குகளை விட எவ்விடயங்களில் வேறுபட்டிருந்தான்?

3. ‘மானிட பரிணாமம்’ எனப்படுவது யாது?

(6) 1. பொருத்தமான மானிட பரிணாமத்தை தொடர்புபடுத்துக.

A) ஹோமோ இரெக்டஸ் — முதலாவது கூம்ப்புகட்டம்

B) ஒஸ்ரோபதிக்கசு — மூன்றாவது கூம்ப்புகட்டம்

C) ஹோமோ பெலிஸ் — இரண்டாவது கூம்ப்புகட்டம்

D) ஹோமோ சேபியன் — நான்காவது கூம்ப்புகட்டம்

E) ஹோமோ நியண்டதாஸ் — ஐந்தாவது கூம்ப்புகட்டம்

2. ஓஸ்ரோபதிக்கசு மனிதனின் சிறப்பியல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

3. ஹோமோ சேபியன் சிறப்பியல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(7) 1. கலாசாரமாற்றம் என்றால் என்ன?

2. கலாசாரமாற்றத்தின் மூன்று கட்டங்களையும் குறிப்பிடுக.

3. பழைய கற்கால மனிதன் எவ்வாறு வாழ்ந்தான் நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

(8) 1. விவசாய யுகத்தினல் ஏற்பட்ட விளைவுகள் மூன்று குறிப்பிடுக.

The National e-learning Portal for The General Education